இந்திய உச்ச நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் திரு.தீபக் மிஸ்ரா

மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.எம்.கான்வில்கர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.டி.ஒய்.சந்திராசுட்

குற்றவியல் மேல்முறையீடு எண் 522-523/2016

அதுல் தாக்கூர் ...மேல்முறையீட்டாளர்

/எதிர்/

ஹிமாச்சல பிரதேச மாநில அரசு ..எதிர்மேல்முறையீட்டாளர்

இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 302 – தாக்குதலால் மரணம் – சம்பவத்தன்று இரவு, இறந்தவரின் விருப்பத்தின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்துக்காக இரண்டாம் மேல்முறையீட்டாளரின் வீட்டில் கூடியிருந்த மேல்முறையீட்டாளர், அவர்களது நண்பர்கள் முன்னிலையில், இறந்தவரை கத்தியால் தாக்கியதன் மூலம் ஆறு காயங்களை ஏற்படுத்தினார் என்பது அரசுத்தரப்பு வழக்காகும் – இறந்தவர், மேல்முறையீட்டாளர் ஏற்படுத்திய காயங்களால்

உயிரிழந்தார் – பிரிவு 304 பகுதி II இன் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றத்தீர்ப்பிட்டது – பிரிவு 302 இன் கீழ் மேல்முறையீட்டாளர்–எதிரியை குற்றவாளி என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது – மேல்முறையீட்டில் கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டது: மேல்முறையீட்டாளருக்கும் இறந்தவருக்கு இடையே திடீரென சண்டை ஏற்பட்டு, இதில் மேல்முறையீட்டாளர், உணர்ச்சி வேகத்தில், இறந்தவரின் உடலில் பல்வேறு பகுதிகளில் ஆறு முறை கத்தியால் குத்தினார் – எந்தவித முன்திட்டமிடலும் இல்லை, மற்றும் மேல்முறையீட்டாளர் செய்த செயல், தேவையற்ற ஆதாயம் பெறாமல் அல்லது கொடூரமான முறையில் நடந்து கொள்ளாமல் உணர்ச்சி வேகத்தில் நடை பெற்றதாகும் – மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட காயங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கும் காரணியாக இருக்க முடியாது என்பது நன்கு நிறுவப்பட்ட நிலைப்பாடாகும் – கூறப்பட்ட பொருண்மையின் தாக்கத்தில், உயர் நீதிமன்றம் வெளிப்படையாக தவறிழைத்துள்ளது – மேல்முறையீட்டாளர் கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினார் என்பது இ.த.ச. பிரிவு 302–ஐ ஈர்க்கும் ஒரு தீர்மானிக்கும் காரணி அல்ல – குற்றச் செயல்களில் கத்தியைப் பயன்படுத்தியது அல்லது மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட பல காயங்களின் உண்மைத்தன்மை ஆகியவை விதிவிலக்கு 4–இன் பலனை மேல்முறையீட்டாளருக்கு மறுக்காது – இ.த.ச. பிரிவு 304 பகுதி–II இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மட்டுமே ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், ரூ.10,000/– அபராதமும், தவறினால் மேலும் ஒரு வருடத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனையும் விசாரணை நீதிமன்றம் வழங்கியது – குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு மற்றும் மேல்முறையீட்டாளர் அற்பமான காரணத்திற்காக, கோபமடைந்து இறந்தவரை தாக்கியது, அதுவும் கத்தியால் தாக்கி பலமுறை குத்தியது என்பது, லேசான தண்டனை விதிக்க உத்தரவாதம் அளிக்காது – தற்போதைய வழக்கின் உண்மை சூழ்நிலையில், தண்டனை காலம் அபராதத்துடன் 10 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்கக்கூடாது.

இந்த மேல்முறையீடுகளை பகுதியாக அனுமதித்து இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்ப்பளித்தது,

1.1. எந்தவித முன்திட்டமிடலும் இன்றி, மேல்முறையீட்டாளர் இறந்தவரைத் தாக்கினார் என்பதை ஆதாரம் தெளிவாக நிறுவுகிறது. இந்த முழுச் சம்பவமும் திடீரென நடந்தது என்றும், இறந்தவர் புகைபிடிக்கும் போது, மேல்முறையீட்டாளரின் முகத்தில் புகையை ஊதியதால், உணர்ச்சி வேகத்தில், திடீர் சண்டை தொடங்கியது. இதனால், மேல்முறையீட்டாளர் ஆத்திரமடைந்தார். அவர் வயதில் மூத்தவர் என்றும், எனவே அவர் முன்னிலையில் புகைபிடிக்கக் கூடாது, புகையை அவரை நோக்கி ஊதக்கூடாது என்றும் அவர்(மேல்முறையீட்டாளர்) அவரிடம் கூறினார், பின்னர், அவர்களுக்கு இடையே திடீரென சண்டை தொடங்கியது, இதில் மேல்முறையீட்டாளர், உணர்ச்சி வேகத்தில், இறந்தவரின் உடலில் பல்வேறு பகுதிகளில் ஆறு முறை கத்தியால் குத்தினார். இறந்தவரை கத்தியால் தாக்கிய உடனேயே, இறந்தவர் படுகாயமடைந்திருப்பதை மேல்முறையீட்டாளர் உணர்ந்து, அவர் இறந்தவருக்கு தண்ணீர் கொடுத்து, மற்ற நண்பர்களுடன் சேர்ந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். இறந்தவர் உயிரிழக்கும் வரை அவர் மருத்துவமனையிலேயே இருந்தார். மேலும் இறந்தவரின் தந்தைக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்து மருத்துவமனைக்கு வரவழைத்துள்ளார். மேலும், இறந்தவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, மருத்துவர்கள் அவருக்கு உடனடி சிகிச்சை அளிக்கவில்லை, ஆனால் அவரது தந்தையை அழைக்க வலியுறுத்தினர். இவை அனைத்தும், இறந்தவரின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் வரையிலும் கூடவே இருந்த கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.11 மற்றும் அ.சா.12–யின் சாட்சியங்களில் இருந்து தெரியவருகிறது. இறந்தவரின் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் மேல்முறையீட்டாளருக்கு இல்லை என்பதை நிகழ்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. [பத்திகள் 9, 10] [251–B–C, D–F]

1.2. இறந்தவரின் விருப்பத்தின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்துக்கு கூடியிருந்த நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட திடீர் சண்டை காரணமாக இந்த சம்பவம் நடந்துள்ளதால், இது கொலை குற்றம் ஆகாத மரணம் விளைவிக்கும் குற்றம் ஆகும். மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட காயங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கும் காரணியாக இருக்க முடியாது என்பது நன்கு நிறுவப்பட்ட நிலைப்பாடாகும். கூறப்பட்ட பொருண்மையின் தாக்கத்தில் உயர் நீதிமன்றம் வெளிப்படையாக தவறிழைத்துள்ளது. பொருத்தமானது என்னவென்றால், இந்த நிகழ்வு திடீரென நடந்தது மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை மற்றும் குற்றவாளி உணர்ச்சி வேகத்தில் செயல்பட்டுள்ளார். இது தொடர்பாக, மேல்முறையீட்டாளரின் வழக்கை சாட்சியங்கள் ஆதரிக்கிறது. மேல்முறையீட்டாளர் கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினார் என்பது இ.த.ச. பிரிவு 302–ஐ ஈர்க்கும் ஒரு தீர்மானிக்கும் காரணி அல்ல. தாக்குதலின் பொது கத்தியைப் பயன்படுத்தியது அல்லது மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட பல(ஆறு) காயங்களின் உண்மைத்தன்மை ஆகியவை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 300 விதிவிலக்கு 4–இன் பலனை மேல்முறையீட்டாளருக்கு மறுப்பதற்கான ஒரே அடிப்படையாக இருக்க முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். நிறுவப்பட்ட பொருண்மைகளின் அடிப்படையில் இந்த விஷயத்தை ஒட்டுமொத்தமாக பரிசீலிக்க நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது. [பத்திகள் 12, 14] [252–A–C; C]

சுரைன் சிங் /எதிர்/ பஞ்சாப் மாநில அரசு, (2017) 5 எஸ்.சி.சி. 796 – சார்வுறப்பட்டது.

2. இ.த.ச. பிரிவு 304 பகுதி–II இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மட்டுமே ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், ரூ.10,000/– அபராதமும், தவறினால் மேலும் ஒரு வருடத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனையும் விசாரணை நீதிமன்றம் வழங்கியது. அதற்காக சிறப்புக் காரணம் எதுவும் விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படவில்லை. குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு மற்றும் மேல்முறையீட்டாளர் அற்பமான

காரணத்திற்காக, கோபமடைந்து இறந்தவரை தாக்கியது, அதுவும் கத்தியால் தாக்கி பலமுறை குத்தியது என்பது, லேசான தண்டனை விதிக்க உத்தரவாதம் அளிக்காது. தற்போதைய வழக்கின் உண்மை சூழ்நிலையில், தண்டனை காலம் அபராதத்துடன் 10 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்கக்கூடாது. அது நீதியின் நோக்கங்களை பூர்த்தி செய்யும். [பத்திகள் 15, 16] [254–D–E]

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(2017) 5 எஸ்.சி.சி. 796 பத்தி 13

குற்றவிவயல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 522–523/2016

குற்றவியல் மேல்முறையீடு எண் 75 மற்றும் 227/2015–இல் சிம்லாவில் உள்ள ஹிமாச்சல பிரதேச உயர் நீதிமன்றத்தின் 01.04.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகும் வழக்கறிஞர்கள் – ஆதித்யா தவான், கிரண் தவான், சந்தர் சேகர் ஆஷ்ரி.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையாகும் வழக்கறிஞர்கள் – டி.கே.தாக்கூர், கூடுதல் தலைமை வழக்கறிஞர், ஷாரிக் அகமது, தைபா கான், அஜய் மார்வா.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு,ஏ.எம்.கான்வில்கர் அவர்களால் பகரப்பட்டது.

அமர்வு வழக்கு எண் 39–S/7/2012–இல் அமர்வு நீதிபதி (வனத்துறை), சிம்லா அவர்கள் 31.12.2014 அன்று வழங்கிய குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனையை மாற்றியமைத்து, சிம்லாவில் உள்ள ஹிமாச்சல பிரதேச உயர் நீதிமன்றம், குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 75 & 227/2015–இல் வழங்கிய 01.04.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக இந்த மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன, அதில் உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை இந்திய தண்டனைச் சட்டம் (இ.த.ச.) பிரிவு 302–இன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, அபராதத்துடன் கூடிய ஆயுள் தண்டனை விதித்தது.

2. விவரங்களின் சுருக்கம் பின்வருமாறு: மேல்முறையீட்டாளர் மற்ற மூவருடன் சேர்த்து இ.த.ச. பிரிவுகள் 302, 301 உடனிணைந்த பிரிவு 32–இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக அமர்வு நீதிபதி (வனத்துறை), சிம்லா அவர்களால் விசாரிக்கப்பட்டார். அரசுத்தரப்பு வழக்கு யாதெனில், சுரங்க வழி எண் 103–இன் அருகில் சண்டை நிகழ்ந்தது, அதில் பலத்த காயம் அடைந்த ஹுன்னி என்பவர் சிம்லாவில் உள்ள ஐ.ஜி.எம்.சி.(IGMC) மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார் என்று 28.07.2011 அன்று அதிகாலை 04.45 மணியளவில் மேற்கு சிம்லா கவலை நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் வந்தது. மருத்துவமனையை வந்தடைந்த காவல் நிலைய பொறுப்பு அதிகாரியான ஷகுந்தலா ஷர்மாவிடம் அடிபட்ட நபர் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர், அவர், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 154–இன் கீழ் ராஜிந்தர் சிங் என்பவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தார். தன்னுடைய வாக்குமூலத்தில், ராஜிந்தர் சிங் தனக்கு இரண்டு குழந்தைகள் என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய மகள் பூஜா கணினி வகுப்பில் பயின்றுவருவதாகவும், மற்றும் அவருடைய 22 வயது மகன் ஹிதேஷ் தாக்கூரும் லாகார் பஜாரில் கணினி வகுப்பில் பயின்றுவருவதாகவும் கூறினார். 27.07.2011 அன்று ஹிதேஷ், மத்திய உணவிற்கு பின், கணினி

வகுப்பிற்கு செல்ல, எச்.பி.–63–3235 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார்சைக்கிளில் வீட்டை விட்டு சென்றார் என்று அவர் கூறினார். பின்னர், அவன் (ஹிதேஷ்) தன் தங்கை பூஜாவை அவள் கைபேசியில் அழைத்து, அவன் தன் நண்பன் அகிலேஷ்யுடன் செல்வதாகவும், இரவு திரும்ப வரமுடியாது என்று கூறியதாகவும் அவர் கூறினார். அவன் தங்கையிடம் இதை அவர்களின் தாயரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் அவர் கூறினார். 28.07.2011 அன்று அதிகாலை 03.00 மணியளவில், அதுல் தாக்கூர் (இங்குள்ள மேல்முறையீட்டாளர்) என்பவர் அவரை தொலைபேசியில் அழைத்து, அவருடைய மகன் ஹிதேஷ் உடல்நிலை சரியில்லாததால், சிம்லாவிலுள்ள ஐ.ஜி.எம்.சி.(IGMC) மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார் என்றும், அவரை மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக்கொண்டதாகவும் கூறினார். தொலைபேசி தகவல் கிடைத்தவுடன், அவர் மருத்துவமனைக்கு விரைந்ததாகவும், தனது மகன் காயங்களுடன் இறந்து கிடந்ததை கண்டதாகவும் அவர் கூறினார். அந்த நேரத்தில், மேல்முறையீட்டாளரும் அங்கிருந்தார்.

3. வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர், புலன்விசாரணை தொடர்ந்தது, மற்றும் 27.07.2011 மற்றும் 28.07.2011 அன்று இரவு முகேஷ் தாக்கூர் (இரண்டாம் எதிரியின்) வீட்டிற்கு மது விருந்திற்கு சென்ற நான்கு எதிரிகளும் மேற்கூறப்பட்ட குற்றத்திற்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். சாட்சியங்களை ஆராய்ந்த பின்னர், விசாரணை நீதிமன்றம், 31.12.2014 தேதியிட்ட தீர்ப்புரையின் மூலம், மற்ற மூன்று எதிரிகளை விடுவித்து, ஆனால், மேல்முறையீட்டாளர் பிரிவு 304 பகுதி II–இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக கண்டறிந்து, அவருக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000/– அபராதமும், தவறினால் ஒரு வருடம் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது.

4. மேற்சொன்ன தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டாளர் குற்றவியல் மேல்முறையீடு எண் 75/2015–ஐ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். புகார்தாரர், மற்ற மூன்று எதிரிகளின் விடுதலையை எதிர்த்தும், மேல்முறையீட்டாளரின்

தண்டனையை அதிகரிக்கவும் கோரி உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீடு எண் 227/2015-ஐ தாக்கல் செய்தார். இரண்டு மேல்முறையீடுகளும் 01.04.2016 தேதியிட்ட பொது தீர்ப்பின் மூலம் முடிவு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் குற்றச் செயலில் ஈடுபட்டது தொடர்பான பொருண்மையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. எனினும், குற்றத்தின் தன்மை குறித்து விசாரணை நீதிமன்றம் பதிவு செய்த காண்முடிவு மற்றும் தீர்ப்பினை உயர் நீதிமன்றம் நேர்மாறாகியது. இந்த விவகாரத்தை ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டு, ஹிதேஷ் தாக்கூரை கொலை செய்த குற்றத்திற்காக இ.த.ச. பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவர் என்றும், விசாரணை நீதிமன்றம் கூறியபடி பிரிவு 304 பகுதி II-இன் கீழ் அல்ல என்றும் முடிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில், மேல்முறையீட்டாளருடன் விசாரிக்கப்பட்ட மற்ற எதிரிகளுக்கு ஆதரவான விடுதலை உத்தரவை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. தற்போதைய மேல்முறையீடுகளில், உயர் நீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்பு அசல் ஒன்றாம் எதிரியால் மட்டுமே எதிர்க்கப்பட்டது.

5. மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆதித்யா தவான், கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களுக்கு இடையே வெளிப்படையான முரண்பாடு இருப்பதாகவும், அது மேல்முறையீட்டாளரின் நலனுக்காக இருக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றத்தை நம்ப வைக்க தீவிர முயற்சி மேற்கொண்டார். அவரின்(வழக்கறிஞரின்) கூற்றுப்படி, குற்றத்தின் மூலகாரணம் சந்தேகத்திற்குரியதாக இருப்பதால், உடன் குற்றவாளிகளை போலவே, மேல்முறையீட்டாளரும் விடுவிக்கப்படுவதற்கு தகுதியானவர் ஆவார். மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி, குற்றச் செயல்களில் மேல்முறையீட்டாளர் ஈடுபட்டார் என்பது நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க விசாரிக்கப்பட்ட எதிர்தரப்பு சாட்சி (எ.சா.1) ஆகியோரின் சாட்சியங்களை எடுத்துக்காட்டினார். எவ்வாறாயினும், அரசுத் தரப்பு நிறுவிய பொருண்மை, அப்படியே எடுத்துக் கொள்ளப்பட்டாலும் கூட,

ஹிதேஷ் தாக்கூரை மேல்முறையீட்டாளர் கொலை செய்தார் என்ற காண்முடிவுக்கு எந்தவொரு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. அதிகபட்சம் இது, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 300–இன் கீழ் வரும் விதிவிலக்கின் கீழ் வரும் கொலை குற்றம் ஆகாத மரணம் விளைவிக்கும் குற்றம் ஆகும், எனவே, இது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 304 பகுதி II–இன் கீழ் தண்டிக்கக்கூடியதாகும். விசாரணை நீதிமன்றம் அந்த குற்றத்தை நியாயமாக ஏற்றுக்கொண்டு, மேல்முறையீட்டாளருக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தது, அதை மேல்முறையீட்டாளர் ஏற்கனவே அனுபவித்துள்ளார். எனவே, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட வேண்டும், மற்றும் உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு, அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவை புதுப்பிப்பதன் மூலம், மேல்முறையீட்டாளர் விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர் சமர்ப்பித்தார். 24.11.2017 நிலவரப்படி, 7 ஆண்டுகள் 3 மாதங்கள் 24 நாட்கள் தண்டனையை மேல்முறையீட்டாளர் ஏற்கனவே அனுபவித்துள்ளார், இதில் ஒரு வருடம் 2 மாதங்கள் மற்றும் 6 நாட்கள் தண்டனைக் குறைப்பு காலமும் அடங்கும்.

6. எவ்வாறெனினும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், இந்த மேல்முறையீடுகளை எதிர்த்தார். எதிர்மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, வழக்கை விசாரித்த இரண்டு நீதிமன்றங்கள் பதிவு செய்த குற்றத்தீர்ப்பு, சந்தேகத்திற்கு இடமின்றி குற்றச் செயலில் மேல்முறையீட்டாளர் ஈடுபட்டார் என்பதை நிறுவிய பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களால் ஆதரிக்கப்படுகிறது. உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்பில் எந்தவொரு தலையீடும் தேவையில்லை. அதேபோல், விசாரணை நீதிமன்றத்தின் முடிவை நேர்மாறாக்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302–ன் கீழ் மேல்முறையீட்டாளரை குற்றவாளி எனத் தீர்ப்புக் கூறி உயர் நீதிமன்றம் பதிவு செய்திருக்கும் காண்முடிவு, குற்றங் காண முடியாததாகும். இது ஹிதேஷ் தாக்கூரின் கொலை வழக்கு, இது இந்திய

தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302 இன் கீழ் தண்டனைக்குரியது, பிரிவு 304 பகுதி II இன் கீழ் அல்ல, இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் ஆயுள் தண்டனை காலத்தை அனுபவிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் நியாயமாக குறிப்பிட்டது. மேல்முறையீட்டு மனுக்களில் தகுதிப்பாடு இல்லை என்றும், அவற்றை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் சமர்ப்பித்தார்கள்.

7. அரசுத் தரப்பு அளித்த வாய்மொழி சாட்சியங்களை, குறிப்பாக, ஹிதேஷ் தாக்கூர், மேல்முறையீட்டாளரால் கத்தியால் தாக்கப்பட்டதால், உடலில் பலத்த காயம் ஏற்பட்டு, இறுதியில் அவர் உயிரிழந்த சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.11 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சாட்சியங்களை நாங்கள் கவனமாக பரிசீலித்தோம். மேற்குறிப்பிடப்பட்ட வாய்மொழி சாட்சியங்களை தவிர, மற்ற சூழ்நிலைகளும், மேல்முறையீட்டாளர் குற்றச் செயலில் உடந்தையாக இருந்ததைச் சுட்டிக் காட்டுகின்றன, அதாவது, அவரது வேண்டுகோளுக்கிணங்க கத்தி கைப்பற்றப்பட்டது மற்றும் மேல்முறையீட்டாளரின் அதே கத்தியால் தாக்கப்பட்டதன் காரணமாக இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை. குற்றச் செயல்களில் மேல் முறையீட்டாளரின் உடந்தை பற்றிய ஒரு காண்முடிவைப் பதிவு செய்வதற்காக விசாரணை நீதிமன்றம் ஆதாரங்களை நியாயமாக பரிசீலனை செய்துள்ளது என்பதை நாங்கள் காண்கிறோம். தொடர்புடைய சாட்சியங்களை மறு பரிசீலனை செய்த பின்னர், உயர் நீதிமன்றம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. வழக்கை விசாரித்த இரண்டு நீதிமன்றங்களின் முடிவுடன் நாங்கள் உடன்படுகிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், 27.07.2011 அன்று இரவு ஹிதேஷ் தாக்கூரின் விருப்பத்தின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்துக்காக முகேஷ் தாக்கூரின் வீட்டில் கூடியிருந்த மேல்முறையீட்டாளர், அவர்களது நண்பர்கள் (அ.சா.11 மற்றும் அ.சா.12 உட்பட) முன்னிலையில், இறந்த ஹிதேஷ் தாக்கூரை கத்தியால் தாக்கியதன் மூலம் ஆறு காயங்களை ஏற்படுத்தினார் என்று வழக்கை விசாரித்த நீதிமன்றங்களால் பதிவுசெய்யப்பட்ட உடன்நிகழ் காண்முடிவுகளை உறுதிப்படுத்த நாங்கள் முனைகிறோம். மேலும்,

மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட காயங்களால் ஹிதேஷ் தாக்கூர் உயிரிழந்தார். எனவே, இது ஒரு கொலை வழக்கு ஆகும்.

8. குறிப்பிடத்தக்க வகையில், மேல்முறையீட்டாளருக்கும் ஹிதேஷ் தாக்கூருக்கும் இடையே திடீர் சண்டை ஏற்பட்டதாகவும், உணர்ச்சி வேகத்தில் மேல்முறையீட்டாளர் ஹிதேஷ் தாக்கூரை தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்தியதாகவும் பதிவில் உள்ள சான்றுகள் தெளிவாக நிறுவுகின்றன. ஹிதேஷ் தாக்கூரை மேல்முறையீட்டாளர் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தாக்கினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, தொடர்புடைய கருத்தும் இல்லை. மேல்முறையீட்டாளர் குற்றவாளி என்று உயர் நீதிமன்றம் அறிவித்தாலும், மேல்முறையீட்டாளரால் ஏற்பட்ட உடல் காயங்கள் ஹிதேஷ் தாக்கூரின் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இருந்தது என்று கூறவில்லை. முக்கியமாக மேல்முறையீட்டாளர் ஹிதேஷ் தாக்கூரை மீண்டும் மீண்டும் கத்தியால் குத்தினார் என்றும், ஹிதேஷ் தாக்கூர் நிராயுதபாணியாக இருந்ததால் அவரால் தற்காத்துக் கொள்ள முடியவில்லை என்றும் கூறி, குற்றத்தின் தன்மை குறித்து விசாரணை நீதிமன்றம் பதிவு செய்த காண்முடிவை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது. எனவே, மேல்முறையீட்டாளர் இ.த.ச. பிரிவு 302-இன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டது.

9. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த மேல்முறையீடுகளில் உள்ள சர்ச்சையானது, குற்றத்தின் தன்மை மற்றும் அதற்காக விதிக்கப்படும் தண்டனை என்று சுருக்கப்பட்டது. மேற்கூறியபடி, நாங்கள் முழுவதும் உடன்பட்ட வழக்கை விசாரித்த இரண்டு நீதிமன்றங்களின் காண்முடிவின்படி, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் என்னவென்றால், மேல்முறையீட்டாளர் ஹிதேஷ் தாக்கூரை, அவர் இறந்த அந்த சம்பவ இரவன்று 6 முறை கத்தியால் தாக்கினர் என்பதேயாகும். எனவே, இது ஒரு கொலை வழக்கு ஆகும். இருப்பினும், மேல்முறையீட்டாளர் ஏற்படுத்திய காயங்கள் ஹிதேஷ் தாக்கூரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டவை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மறுபுறம்,

எந்தவித முன்திட்டமிடலும் இன்றி, மேல்முறையீட்டாளர் ஹிதேஷ் தாக்கூரைத் தாக்கினார் என்பதை ஆதாரம் தெளிவாக நிறுவுகிறது. இந்த முழுச் சம்பவமும் திடீரென நடந்தது என்றும், ஹிதேஷ் தாக்கூர் புகைபிடிக்கும் போது, மேல்முறையீட்டாளரின் முகத்தில் புகையை ஊதியதால், உணர்ச்சி வேகத்தில், திடீர் சண்டை தொடங்கியது. இதனால், மேல்முறையீட்டாளர் ஆத்திரமடைந்தார். அவர் வயதில் மூத்தவர் என்றும், எனவே அவர் முன்னிலையில் புகைபிடிக்கக் கூடாது, புகையை அவரை நோக்கி ஊதக்கூடாது என்றும் அவர்(மேல்முறையீட்டாளர்) அவரிடம் கூறினார், பின்னர், அவர்களுக்கு இடையே திடீரென சண்டை தொடங்கியது, இதில் மேல்முறையீட்டாளர், உணர்ச்சி வேகத்தில், ஹிதேஷ் தாக்கூரின் உடலில் பல்வேறு பகுதிகளில் ஆறு முறை கத்தியால் குத்தினார்.

10. மேல்முறையீட்டாளர் மற்றும் இறந்த ஹிதேஷ் தாக்கூர் உட்பட மற்றவர்கள், ஹிதேஷ் தாக்கூரின் விருப்பத்தின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மது விருந்துக்காக அந்த இடத்தில் கூடினர் என்பதை அ.சா.11 மற்றும் அ.சா.12–யின் (கண்ணுற்ற சாட்சிகள்) சாட்சியங்கள் உறுதிப்படுத்துகிறது. சம்பவம் நடந்த போது, அவர்கள் மது அருந்தியுள்ளனர். ஹிதேஷ் தாக்கூரை கத்தியால் தாக்கிய உடனேயே, ஹிதேஷ் படுகாயமடைந்திருப்பதை மேல்முறையீட்டாளர் உணர்ந்து, அவர் ஹிதேஷ்க்கு தண்ணீர் கொடுத்து, மற்ற நண்பர்களுடன் சேர்ந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஹிதேஷ் தாக்கூர் உயிரிழக்கும் வரை அவர் மருத்துவமனையிலேயே இருந்தார். மேலும் ஹிதேஷின் தந்தைக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்து மருத்துவமனைக்கு வரவழைத்துள்ளார். மேலும், ஹிதேஷ் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, மருத்துவர்கள் அவருக்கு உடனடி சிகிச்சை அளிக்கவில்லை, ஆனால் அவரது தந்தையை அழைக்க வலியுறுத்தினர். இவை அனைத்தும், ஹிதேஷ் தாக்கூரின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் வரையிலும் கூடவே இருந்த கண்ணுற்ற

சாட்சிகளான அ.சா.11 மற்றும் அ.சா.12–யின் சாட்சியங்களில் இருந்து தெரியவருகிறது.

11. நடந்த சம்பவங்களை கருத்தில் எடுத்துக்கொண்டால், ஹிதேஷ் தாக்கூரின் மரணத்தை ஏற்படுத்தும் நோக்கம் மேல்முறையீட்டாளருக்கு இல்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹிதேஷ் தாக்கூருக்கும் மேல்முறையீட்டாளருக்கும் இடையே ஏற்பட்ட திடீர் மோதலில், எந்தவித முன்திட்டமிடலும் இன்றி, இந்த சம்பவம் நடந்துள்ளது, மேலும் உணர்ச்சி வேகத்தில், மேல்முறையீட்டாளர் ஹிதேஷ் தாக்கூரை ஆறு முறை கத்தியால் குத்தினார். மாறாக, தனது தவறை உணர்ந்த அவர், உடனடியாக ஹிதேஷ் தாக்கூருக்கு தண்ணீர் கொடுத்து, மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இறுதிச் சடங்குகள் முடியும் வரை அங்கேயே இருந்தார். இறந்த ஹிதேஷ் தாக்கூரின் தந்தையும் – அ.சா.2 , ஹிதேஷ் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார் என்பதை தெரிவிக்க மேல்முறையீட்டாளர் தன்னைத் தொடர்பு கொண்டார் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறார்.

12. இந்த விவகாரத்தை ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டு, தற்போதைய வழக்கின் பொருண்மைகள், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 300 விதிவிலக்கு 4–இன் பொருத்தத்தை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில், ஹிதேஷ் தாக்கூரின் விருப்பத்தின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்துக்கு கூடியிருந்த நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட திடீர் சண்டை காரணமாக இந்த சம்பவம் நடந்துள்ளதால், இது கொலை குற்றம் ஆகாத மரணம் விளைவிக்கும் குற்றம் ஆகும். எந்தவித முன்திட்டமிடலும் இல்லை, மற்றும் மேல்முறையீட்டாளர் செய்த செயல், தேவையற்ற ஆதாயம் பெறாமல் அல்லது கொடூரமான முறையில் நடந்து கொள்ளாமல் உணர்ச்சி வேகத்தில் நடை பெற்றதாகும். மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட காயங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கும் காரணியாக இருக்க

முடியாது என்பது நன்கு நிறுவப்பட்ட நிலைப்பாடாகும். கூறப்பட்ட பொருண்மையின் தாக்கத்தில் உயர் நீதிமன்றம் வெளிப்படையாக தவறிழைத்துள்ளது. பொருத்தமானது என்னவென்றால், இந்த நிகழ்வு திடீரென நடந்தது மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை மற்றும் குற்றவாளி உணர்ச்சி வேகத்தில் செயல்பட்டுள்ளார் என்பதேயாகும். இது தொடர்பாக, மேல்முறையீட்டாளரின் வழக்கை சாட்சியங்கள் ஆதரிக்கிறது. மேல்முறையீட்டாளர் கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினார் என்பது இ.த.ச. பிரிவு 302–ஐ ஈர்க்கும் ஒரு தீர்மானிக்கும் காரணி அல்ல. குற்றச் செயல்களில் கத்தியைப் பயன்படுத்தியது அல்லது மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட பல காயங்களின் உண்மைத்தன்மை ஆகியவை விதிவிலக்கு 4–இன் பலனை மேல்முறையீட்டாளருக்கு மறுக்காது.

13. இதே போன்ற சூழ்நிலையைக் கையாண்டுள்ள சுரைன் சிங் /எதிர்/ பஞ்சாப் மாநில அரசு, (2017) 5 எஸ்.சி.சி. 796 என்ற வழக்கில், இந்த நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 300 விதிவிலக்கு 4–இன் நோக்கம் குறித்த தீர்க்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்துள்ளது. அந்த வழக்கிலும், குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவரை குருவாளால்(kirpan) பலமுறை தாக்கி காயங்களை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தினார். சட்ட நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்த பிறகு, நீதிமன்றம் இ.த.ச. பிரிவு 302–க்கு பதிலாக பிரிவு 304 பகுதி–II இன் கீழ் இந்த குற்றத்தை மாற்றியது. அதே சட்டக் கோட்பாட்டைப் பின்பற்றி, பொருண்மையை மனதில் கொண்டு, பிரிவு 304 பகுதி–II இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு தண்டனை வழங்குவது குறித்து விசாரணை நீதிமன்றம் எடுத்துள்ள கருத்து குற்றங் காண முடியாததாகும். விசாரணை நீதிமன்றம் இவ்வாறு கூறியுள்ளது:

> "*60. அரசுத் தரப்பு பதிவு செய்த சாட்சியங்கள், இறந்த ஹிதேஷ் மற்றும் எதிரி நீண்ட காலமாக சுமுகமான உறவுகளைக் கொண்டிருந்தனர், மற்றும் ஒருவரையொருவர் அறிந்தவர்கள் மற்றும் நல்ல நண்பர்களாக*

இருந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது. எதிரி முகேஷின் அறையில் இறந்தவரால் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது மற்றும் இறந்தவரே குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விருந்தில் கலந்து கொள்ள அழைத்துள்ளார். இந்த விருந்தில், அவர்கள் அதிக அளவு மது அருந்தியுள்ளனர், திடீரென இறந்த ஹிதேஷ் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட அதுல் தாக்கூர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது, இதன் விளைவாக குற்றம் சாட்டப்பட்ட அதுல் ஹித்தேஷை கத்தியால் குத்தினார், இதன் விளைவாக அவர் இறந்தார்.....

61. குற்றம் சாட்டப்பட்ட அதுல் தாக்கூர் கத்தியால் குத்தப்பட்ட காயத்தின் விளைவாக 27/28.07.2011 அன்று இரவு சிம்லாவில் உள்ள ஐ.ஜி.எம்.சி.யில் ஹிதேஷ் இறந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹிதேஷின் மரணத்திற்கு காரணமான குற்றவாளியின் இந்த நடவடிக்கை கொலையாகுமா அல்லது கொலை குற்றம் ஆகாத மரணம் விளைவிக்கும் குற்றமா என்பது பரிசீலிக்க வேண்டிய கேள்வி. இறந்தவர்களுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் இடையே பகை இல்லை, மாறாக அவர்கள் நல்லுறவைக் கொண்டிருந்தனர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும். இறந்தவருக்கும் குற்றம் சாட்டப்பட்ட அதுலுக்கும் இடையே சண்டை இருந்தது என்ற உண்மையை மறுக்க முடியாது, ஏனெனில் அ.சா.11 – ஹிமான்ஷு, அ.சா.12 – மனோஜ் பன்சால் மற்றும் அ.சா.1 – அசுதோஷ் ஆகியோரின் சாட்சியங்களில் அவர்களுக்கு இடையில் சண்டை நடந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில், குற்றம் சாட்டப்பட்ட அதுல், பிரிவு 300 இன் விதிவிலக்கு 4 இன் பலனை அவருக்கு மறுக்கும் வகையில், தேவையற்ற ஆதாயம் பெற்றாரா அல்லது கொடூரமான அல்லது விரோதமான முறையில் செயல்பட்டாரா என்பதை அறிய அரசு தரப்பு சாட்சியங்களை இந்த நீதிமன்றம் ஆய்வு செய்ய வேண்டும். உண்மையில்,

குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவரைக் கொன்றதற்கான எந்த நோக்கத்தையும் அரசுத் தரப்பால் நிரூபிக்க முடியவில்லை. குற்றம் சாட்டப்பட்ட முகேஷ் தாக்கூரின் அறையில் மது அருந்தும் நிகழ்வு பரஸ்பர சம்மதத்துடன் நடந்தது. இந்த சூழ்நிலைகளிலிருந்து, சர்ச்சைக்குரிய சம்பவம், உணர்ச்சி மிகுதியால் ஏற்பட்ட திடீர் சண்டையில் நடைபெற்றதாகக் கருத முடியும். குற்றம் சாட்டப்பட்ட அதுல் சொல்லப்பட்ட சண்டையில் தேவையற்ற ஆதாயம் பெற்றாரா அல்லது கொடூரமான அல்லது விரோதமான முறையில் செயல்பட்டாரா என்பது பரிசீலனைக்கு எழுந்த அடுத்த கேள்வி ஆகும். இறந்தவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களும் கணிசமான அளவு மது அருந்தியுள்ளனர் என்பதை அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பொருண்மையை கருத்தில் கொண்டு, கத்தியால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள், குற்றம் சாட்டப்பட்ட அதுலால், தேவையற்ற ஆதாயம் பெறும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டவை அல்ல என்பதை முற்றிலும் நிராகரிக்க முடியாது. குடிபோதையில் குற்றம் சாட்டப்பட்டவர் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டையின் காரணமாக காயங்களை ஏற்படுத்தியிருக்கலாம். மேலும், மருத்துவ சான்றிதழ் – சான்றாவணம் – அ.சா.18/ஏ–இல் டாக்டர் சந்தீப் கவுசிக் கவனித்த காயங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்ட அதுல் தாக்கூர், ஹிதேஷை கொலை செய்ய நினைத்தார் அல்லது அந்த காயங்கள் மிகவும் ஆபத்தானவை, அவை எல்லா வகையிலும் மரணத்தை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்வது கடினம். இருந்தபோதிலும், காயங்கள் மிகவும் தீவிரமானவையே, மற்றும் ஒரு நபரின் மார்பு அல்லது வயிற்றில் கத்தியால் காயம் ஏற்படுத்தினால், இந்த செயல் பாதிக்கப்பட்டவரின் மரணத்திற்கு வழிவகுக்கும் என்பதை குற்றம் சாட்டப்பட்டவர் நிச்சயமாக அறிந்திருப்பார்.

62. பதிவு செய்யப்பட்ட விஷயங்களைப் பரிசீலித்த இந்த நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட அதுல் தாக்கூர், இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 304 பகுதி II இன் கீழ் மட்டுமே குற்றவாளியாகக் கருத முடியும் என்று கருதியது."

14. மேற்கூறியபடி, மேல்முறையீட்டாளர் கத்தி போன்ற ஆயுதத்தால் மீண்டும் மீண்டும் ஹிதேஷ் தாக்கூரை குத்தியதால், ஆறு கொடுங்காயங்கள் ஏற்பட்டதால் அவர் உயிரிழந்தார் என்பதை முக்கியமாக கருத்தில் கொண்டு, உயர் நீதிமன்றம், குற்றத்தின் தன்மை குறித்த கேள்வியின் மீதான விசாரணை நீதிமன்றத்தின் இந்த காண்முடிவை ரத்து செய்தது. தாக்குதலின் போது கத்தியைப் பயன்படுத்தியது அல்லது மேல்முறையீட்டாளரால் ஏற்படுத்தப்பட்ட பல(ஆறு) காயங்களின் உண்மைத்தன்மை ஆகியவை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 300 விதிவிலக்கு 4–இன் பலனை மேல்முறையீட்டாளருக்கு மறுப்பதற்கான ஒரே அடிப்படையாக இருக்க முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். நிறுவப்பட்ட பொருண்மைகளின் அடிப்படையில், இந்த விஷயத்தை ஒட்டுமொத்தமாக பரிசீலிக்க நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை மேற்சொன்ன சுரேன் சிங் வழக்கில் மீண்டும் கூறப்பட்டுள்ளது.

15. தண்டனையின் அளவு குறித்த விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மீட்டெடுக்கவும் புதுப்பிக்கவும் மேல்முறையீட்டாளர் தனது நயமான வாதத்தில் சரியாக உள்ளாரா என்பதே அடுத்த கேள்வியாகும். இ.த.ச. பிரிவு 304 பகுதி–II இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மட்டுமே ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், ரூ.10,000/– அபராதமும், தவறினால் மேலும் ஒரு வருடத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனையும் விசாரணை நீதிமன்றம் வழங்கியது. அதற்காக சிறப்புக் காரணம் எதுவும் விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படவில்லை. குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு மற்றும் மேல்முறையீட்டாளர் அற்பமான காரணத்திற்காக, கோபமடைந்து ஹிதேஷ் தாக்கூரை தாக்கியது, அதுவும் கத்தியால் தாக்கி பலமுறை குத்தியது என்பது,

லேசான தண்டனை விதிக்க உத்தரவாதம் அளிக்காது. எவ்வாறாயினும், தற்போதைய வழக்கின் உண்மை சூழ்நிலையில், தண்டனை காலம் அபராதத்துடன் 10 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்கக்கூடாது என்ற எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அது நீதியின் நோக்கங்களை பூர்த்தி செய்யும்.

16. அதன்படி, அசல் ஒன்றாம் எதிரி – அதுல் தாக்கூர் தாக்கல் செய்த இந்த குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 75 மற்றும் 227/2015–ஐ பகுதியாக அனுமதிக்கிறோம். குற்றத்தின் தன்மையைப் பொறுத்து, மேல்முறையீட்டாளருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பை நாங்கள் மாற்றியமைத்து, அதற்குப் பதிலாக விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை மீட்டளிக்கிறோம். மேல்முறையீட்டாளர் இ.த.ச. பிரிவு 304 பகுதி–II இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, 10 (பத்து) ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையுடன், ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) அபராதமும், தவறினால் மேலும் ஓராண்டு சிறைத்தண்டனை அனுபவிக்கவும் விதிக்கப்பட்டது. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 428 இன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு எதிரீட உரிமை உண்டு என்பதை குறிப்பிடத் தேவையில்லை.

17. மேற்கூறிய விதிமுறைகளின் படி, இந்த மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டது.

மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."